முச்சந்தி முரளி



"எத்தினை பேரை பிடிச்சு அடைச்சாலும் உவையின்ர எல்லைமீறலுக்கு ஒரு எல்லையேயில்லை போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 219

செவ்வாய்க்கிழமை
02 ஜூலை 2024

ஆனி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# சம்பந்தனின் இறுதிக்கிரியை திருமலையில் ஞாயிறன்று!

## நாளை நாடாளுமன்றில் அஞ்சலி

**கொழும்பு, ஜூலை 2**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் இறுதிக்கிரியைகள் அவரது சொந்த இடமான திருகோணமலையில் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை அரச நிகழ்வாக நடைபெறவுள்ளன.**

11



## பெருந்தலைவர் சம்பந்தனுக்கு வட்டு. தமிழரசில் அஞ்சலிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவுக்கு, வட்டுக்கோட்டை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப் பினருமான ஈ.சரவணபவனின் தலைமையில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

11



## தமிழர்களின் நீதிக்காக பாடுபட்டவர் சம்பந்தன்!

### மோடி இரங்கல்

புதுடில்லி, ஜூலை 2

தமிழர்களின் கண்ணியத்துக்காகவும், நீதிக்காக வும் சம்பந்தன் தொடர்ந்து பாடுபட்டார் என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். சம்பந்தனின் மறைவை முன்னிட்டு

11

## சம்பந்தனின் இடத்துக்கு குகதாசன்?

கொழும்பு, ஜூலை 2

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோண மலை மாவட்ட

11

விரிவுகள்:- பக். 11

## 25 இந்திய மீனவர்கள் நேற்று நெடுந்தீவுக் கடலில் கைது

## கோப்பாயில் கொலை; ஒருவர் நேற்றுக் கைது

## அதிகாரப் பகிர்வுக்காக அயராது உழைத்தவர்!

### தமிழக முதல்வர் இரங்கல்

சென்னை, ஜூலை 2

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.

11

## பாடசாலைகள் முன் இன்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூலை 2

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளுக்கு முன்பாக இன்று நண்பகல் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. அதிபர்கள், ஆசிரியர்களின் ஊதிய

11





மக்கள் மனதில் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் வழக்குகள் இனி விரைவில் முடியும்

## சட்டவிதிகளில் திருத்தம்



**யாழ்ப்பாணம், ஜூலை 2**

**குற்றவியல் வழக்குகளை விரைவாகத் தீர்க்கும் நோக்கத்துடன், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மனு பேரம் அல்லது மனு ஏற்பாட்டு விதிகளை அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

நீதிமன்ற நடவடிக்கைகளில் தாமதங்களைக் குறைப்பது, சிறைச்சாலை நெரிசலைக் குறைப்பது மற்றும் வழக்குகளின் தேக்க நிலையைக் குறைப்பது உள்ளிட்ட காரணங்களுக்காக இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட திருத்தத்தின்படி, குற்றம் சாட்டப்பட்ட பிரதிவாதியும் அரசுத் தரப்பும் ஒரு ஒப்பந்தத்தில் நுழையமுடியும்.

அதேவேளை, அங்கு குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணைக்குச் செல்வதற்குப் பதிலாக குற்றத்தை ஒப்புக்கொள்ளலாம்.

இதன் விளைவாக தண்டனையைக் குறைக்கவும் அபராதம் அல்லது இழப்பீட்டுத் தொகையைக் குறைக்கவும் ஒரு பரிந்துரையைப் பெறக்கூடியதாக இருக்கும். மேலும், நீதிவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதற்கு முன்பதாகவே, இரண்டு தரப்பினரும் மனு உடன்பாடுகளில் நுழைய முடியும் என்றும் இந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## அபிவிருத்திப் பணிகள் சீனாவால் கடன்வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 2

கடன் நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்களுக்காக சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியிடமிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான கடன்களை இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளது.

கடன் மறுசீரமைப்புத் தொடர்பான சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இலங்கை இந்த வாரம் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இதனையடுத்தே சீனாவின் இந்தக் கடன் வசதி இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

இந்த நிதி கிடப்பில் போடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# இலங்கை கனியவளத்திலும் கண்வைத்தது அதானிகுழு

கொழும்பு, ஜூலை 2

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி மற்றும் மன்னாரில் காற்றாலை மின்சாரத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்தியாவின் அதானி நிறுவனம், இலங்கையில் மூன்றாவது திட்டம் ஒன்றையும் முன்மொழிந்துள்ளது.

இலங்கையின் கடல் படுக்கையில் பெறுமதிமிக்க கனிமங்களை தோண்டுவதற்கான முன்மொழிவை அதானி நிறுவனம் முன்வைத்துள்ளது.

இந்த முயற்சிக்காக, அதானி குழுமம் தைவானிய நிறுவனமான உமிகோர் தைவானுடன் கூட்டு முயற்சியில் இறங்கியுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்பரப்பு சுரங்க உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னர், இந்தியப் பெருங்கடலின் ஆழத்தில் மறைந்துள்ள பெறுமதிமிக்க கனிமங்களைக் கண்டறிவதற்காக, இந்தியாவுடன் கூட்டுச்சேர்வது தொடர்பாக இலங்கையும் சிந்தித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல், கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்களுக்கு பிரத்தியேக பொருளாதார மண்டலத்தை பொருளாதார நோக்கங்களுக்காக செயற்படுத்த, இலங்கைக்குபிரத்தியேகஉரிமைஉள்ளது.

எனவே, மத்திய இந்தியப் பெருங்கடலில் கனிமங்களைத் தோண்டுவதற்கு இது உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (ச-இ)

## மாணவர்களின் பாதுகாப்பு முன்மொழிவு சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மாணவர்களுக்கு உடல்ரீதியான தண்டனையை விலக்கி, பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் நிபுணர் குழுவால் கல்வியமைச்சு, நீதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பாடசாலைகளில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

முன்மொழிவுகளில் மாணவர்களுக்கு, ஆசிரியர்களால் வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனையை தடை செய்வதற்கான நடவடிக்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பரிந்துரை, பாடசாலைகளில் ஒழுக்கத்தை வளர்ப்பதை கடினமாக்கும் என்ற கருத்துகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## போதை வியாபாரம் கடற்படையினர் கைது

கொழும்பு, ஜூலை 2

போதைப்பொருள் வர்த்தகத்துக்கு உதவியதாக சந்தேகிக்கப்படும் கடற்படை அதிகாரிகள் இருவரை கடற்படையின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக விசாரணையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## பாலித மகனுக்கு பிணை

கொழும்பு, ஜூலை 2

புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பாலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டாரவை 5 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்க புத்தளம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## தேர்தல் பணிகளுக்கான கொடுப்பனவை அதிகரிக்குக

கொழும்பு, ஜூலை 2

தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்குரிய கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டுமென தேர்தல்கள் திணைக்களம் பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய பொதுநிர்வாக அமைச்சு தற்போது தேர்தல் பணிகளுக்கு தேவையான ஆளணி மற்றும் வாகனங்கள் போன்ற விவரங்கள் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தேர்தல் பணிகளுக்குத் தேவையான ஆளணி மற்றும் வாகனங்கள் போன்ற விவரங்கள் திரட்டும் பணி முடிவடைந்ததும் உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே கொடுப்பனவுகள் பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# தடையுத்தரவு நீங்கின் மருந்துவிலை குறையும்



கொழும்பு, ஜூலை 2

மருந்துப்பொருள்களின் விலையைக் குறைப்பதற்கான நீதிமன்ற தடையுத்தரவு நீக்கப்பட்டால் 60 அத்தியாவசிய மருந்துப்பொருள்களின் விலையைக் குறைப்பதற்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கமுடியும் என்று தேசிய மருந்து வகைகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுத் தலைவர் மருத்துவர் ஆனந்த விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

மருந்துப்பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு எதிராக மருந்து விற்பனையாளர் சங்கம் நீதிமன்ற தடையுத்தரவு வாங்கியுள்ளது.

மருந்துப்பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கும் பட்சத்தில் மக்களுக்குத் தரமான மருந்துகளை வழங்கமுடியாது. தரம் குறைந்த மருந்துகளையே வழங்க முடியும் என்றும் மருந்து விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உறவுகளைத்தேடி யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 2

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை மு.ப. 10மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரியும், தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமக்கு நீதி வழங்கக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப-27)

## மீனவரை விடுவிக்குமாறு இராமேஸ்வரத்தில் மறியல்

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில், 4 படகுகளுடன் 25 இந்தியர்கள் கைது செய்ததைக் கண்டித்தும், அவர்களை விடுதலை செய்யக்கோரியும், இந்திய தமிழ்நாடு பாம்பன் மீனவர்கள் கடலில் இறங்கிப் போராட்டம் ஒன்றினை நேற்றுத் திங்கட்கிழமை காலை முன்னெடுத்துள்ளனர். அதுமட்டுமன்றி, அவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி, பாம்பன் சாலை பாலத்தில் வீதி மறியல் போராட்டத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக ஈடுபட்டனர். மீனவர்களின் வீதி மறியல் போராட்டத்தால் மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட நேரமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனையடுத்து, அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மீனவர்கள் தங்களது போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ள நிலையில் மீனவர்களை விடுதலை செய்யாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்துள்ளனர். (ப-27)



### கோணேஸ்வர ஆலயத்தின்

## புனிதத்தைப் பாதுகாக்க அமைதிப் போராட்டம் !

திருகோணமலை,ஜுலை 2

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கக்கோரி, திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலனசபைத் தொண்டர்கள் மற்றும் சைவஅடியார்கள் இணைந்து, ஆலய பரிபாலனசபை பணிமனைக்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை அமைதிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆலயத்துக்குச் செல்லும் வீதியின் இரு பக்கமும் அமைந்திருக்கும் கடை ஒன்றில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அனுமதியற்ற கடைகளை அகற்றவேண்டும் என்றும், ஆலயத்தின் புனிதத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று குறிப்பிட்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப)

## எரிபொருள் நிரப்பு நிலைய அனுமதியில் சந்தேகம்

கொழும்பு, ஜுலை 2

புதிதாக 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது என்று கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில், 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் அவை குறிப்பிட்டுள்ளன. (எ-இ)

# தமிழக மீனவர்களின் விடயத்தில் இந்திய மத்திய அரசு அக்கறை

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

இந்தியா, ஜுலை 2

நாங்கள் எப்போதும் தமிழக மீனவர்களின் விடயத்தில் அக்கறையாகவே இருக்கிறோம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கைக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் தொடர்பாக, ஜுன் 19, 24, 25 ஆம் திகதிகள் இடப்பட்ட தங்களது கடிதங்கள் கிடைத்துள்ளன. 26 ஆம் திகதி, 34 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆறு பேர் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் யாழ்ப்பாணத்திலுள்ள துணைத் தூதரகமும் இவர்களை விரைவாகவும் தண்டனையின்றியும் விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

மீனவர்களின் பாதுகாப்புக்கும், நலன்களுக்கும் நாங்கள் எப்போதும் முக்கியத்துவமளித்து வருகிறோம் என உறுதியளிக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-6)

## தினம் தெரியுமோ?

மாதா, பிதா, குரு, தெய்வம் எண்டு சொல்லுவினம். கடவுளை விடவும் படிப்பிக்கிற வாத்தியாரும், ரீச்சர்மாரும் தான் மேலானவை. அப்பிடித்தான் முந்தியொரு காலம் இருந்தது. பிள்ளையளுக்கு ரோல் மொடலா அவைக்குப் படிப்பிக்கிறவைதான் இருப்பினம். அப்பவெல்லாம் வாத்திமார், ரீச்சர்மாரைக் கண்டாலே பிள்ளையள் முன்னுக்கு நிக்கமாட்டினம். அந்தளவுக்கு மரியாதை கலந்த பயம். சிலவேளை பள்ளிக்கூடம் தவிர்ந்த வேற இடங்களில பிள்ளையள் தாங்களுக்குப் படிப்பிக்கிறவையைக் காணவேண்டி வந்தால், முதல்ல அவையின்ர கால்லவிழுந்து கும்பிட்டுட்டுத்தான் கதைப்பினம்.அதெல்லாம் அந்தக் காலம். கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான மாதிரி இப்ப நிலைமை அப்பிடியே தலைகீழா மாறிப்போட்டுது. அதுக்கு உதாரணமா இண்டைக்கு ஒண்டைச் சொல்லலாம் போல இருக்கு.

வலிகாமத்தில இருக்கிற பழைய பள்ளிக்கூடங்களில அதுவுமொண்டு. 'யாழ்ப்பாணக் கம்பஸ்' வர முதல், ஒரு கம்பஸூக்குரிய மதிப்போடயும், வளத்தோடையும் இருந்த அந்தப் பள்ளிக்கூடம் ஒழுக்கத்துக்கும் பேர் போனது. அப்பிடிப்பட்ட பள்ளிக்கூடத்தில கிட்டடியில பரிசளிப்புவிழா நடந்தது. பரிசளிப்பு விழாவுக்கு வந்த பிள்ளையள், பெற்றார், ரீச்சர்மார், வெளியாக்கள் எல்லாருமே மேடை, முகப்பு எண்டு கன இடங்களில நிண்டு போனில போட்டோ மழை பொழிஞ்சிருக்கினம். பரிசளிப்பு விழா முடிஞ்சகையோட எல்லாரின்ர பேஸ்புக்கிலையும் அவையவை எடுத்த செல்பிப் போட்டோக்களை தெறிக்க விட்டிருக்கினம். இப்பிடி செல்பி போட்ட ஆக்கள் ஆரெண்டு நினைக்கிறியள்? அங்க படிப்பிக்கிற ரீச்சர்மார்தான். நடிகையள்மாதிரி விதவிதமான போஸ் குடுத்தபடி அவை போட்ட செல்பியளுக்கு. 'வாவ்' சூப்பர், 'கலக்கிறீங்கள்' எண்டு ரெயின் மாதிரி கொமெண்ட்ஸூகளும் நீண்டுகொண்டே போயிருக்குது. அப்பிடி கொமண்ட்ஸ் போட்டவை அவையின்ர ப்ரெண்ட்ஸோ இல்லாட்டி அவையோட கூடப்படிப்பிக்கிறவையோ இல்லை. எல்லாரும் அந்த ரீச்சர்மாரிட்ட படிக்கிற பிள்ளையள் தான். 'உன் இசையெனும் வெள்ளத்தில் நனைய ஓடோடி வந்த என்னை ஏமாற்றலாமா? பாடு சாந்தா, பாடு!' சிங்காரவேலனே எண்ட பாட்டில வாற வசனம் மாதிரி 'என்ன ரீச்சர், இந்தப் போட்டோ மட்டும் தானா? வேற போடமாட்டிங்களா?' எண்டு சில பிள்ளையள் கேக்க ரீச்சர்மாரும் புளுகத்தோட இன்னும் சில படங்களைப் போட, பேஸ்புக்கில ஒரே ஆசிரிய - மாணவ கொண்டாட்டம் தான்.

செல்பி எண்டது இப்பிடித் தூக்கிப்பிடிச்சுக் கதைக்க வேண்டிய விசயமோ? எண்டு சிலர் கேக்கலாம். இப்பத்தைப்பிள்ளையள் சீரழியிறதுக்கு காரணமே உந்தப் போனும், செல்பியும் தான். ரீச்சர்மார் செல்பி எடுத்து போட்டால்,அதுக்கு லைக்ஸூம் குவிஞ்சால், பிள்ளையளும் அதைப்பார்த்து தாங்களும் செல்பி எடுத்து பேஸ்புக்கில போடோணும் எண்டு ஆசைப்படுங்கள். அது பிழை எண்டு ஆரும் சொன்னால் 'ஏன், எங்கட ரீச்சரே போடுறா? நாங்கள் போட்டால் என்ன?' எண்டு திருப்பிக் கேட்டால் என்ன செய்யிறது. வாத்திமாரும், ரீச்சர்மாரும் பிள்ளையளுக்குத் தனிய படிப்பை மட்டும் சொல்லிக்குடுக்கிறேலை. எப்பிடி வாழோணும் எண்டதையும் தானே படிப்பிக்கினம். கலியாணம் கட்டினால் கால்கட்டு, பிள்ளை பிறந்தால் வாய்க்கட்டு, படிப்பிக்க வெளிக்கிட்டா போன் 'கட்' எண்டு உந்த வாத்திமாரும் ரீச்சர்மாரும் இருந்தாலே எங்கட பிள்ளையள் ஒழுங்கா இருக்கும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சராக செயற்படுவதற்கு தயார்

## முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சு வழங்கப்பட்டால், அதை ஏற்றுச் செயற்படுவதற்குத் தயார் என்று முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பொன்சேகா வெளியேறவுள்ளதால், பாதுகாப்பு அமைச்சுப் பதவி யாருக்கு வழங்கப்படும் என்ற விவாதம் தற்போது பூதாகரமாக எழுந்துள்ள நிலையிலேயே, இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாட்டுக்குத் தேவையான விடயங்களைச் செய்யவே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளேன். பலமானதொரு அரசை அமைப்பதே எனது அணியின் நோக்கம். நான் பதவிகளை ஏற்பதற்கோ அல்லதுதேர்தலில்போட்டியிடவோ தனிப்பட்ட ரீதியில் எதிர்பார்க்கவில்லை. எனக்கு உடலில் இன்னும் பலம் உள்ளது. எனவே, நாட்டுக்கு எதையேனும் செய்வதே எனது எதிர்பார்ப்பாகும். பாதுகாப்பு அமைச்சு தொடர்பில் சஜித்துடன் பேச்சு நடத்தவில்லை. எனினும், குறித்த பதவியை நான் ஏற்க வேண்டும் என கட்சித் தலைவர் மற்றும் நாட்டு மக்கள் கருதினால் அதனை ஏற்றுச் செயற்படுவதற்குரிய வலிமை உள்ளது- என்றார். (ம-44)

# வலதுசாரிகள் முன்னிலை பரிஸில் வன்முறை



பரிஸ், ஜூலை 2

பிரான்ஸ் தலைநகர் பரிஸின் சில பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளதோடு, பொதுச் சொத்துகளும் சேத மடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில் தீவிரவலதுசாரிக் கட்சி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து எதிர்த்தரப்பினர் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால், பரிஸில் அமைந்துள்ள சில வர்த்தக நிலையங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதால், அங்கு பதற்றமானதொரு சூழலும் ஏற்பட்டுள்ளது.


வன்முறையில் ஈடுபட்டுள்ள சிலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பரிஸின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது என்று சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரிகள்

முன்னிலைபெற்றுள்ள அதேவேளை தற்போதைய ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கட்சி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் முதல் சுற்றில் தீவிர வலதுசாரிகள் வெற்றிபெற்றுள்ளமை அதன் வரலாற்றில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

# மரண அறிவித்தல்

மலர்வு
30 . 03 . 1962



உதிர்வு
01 . 07 . 2024

## அமரர் சண்முகநாதன் மனோகரன்

(NEW கந்தசாமி ஸ்டோர்ஸ் உரிமையாளர்)

இணுவில் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பலாங்கொடையைப் வசிப்பிடமாகவும் கொண்ட நியூ கந்தசாமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சண்முகநாதன் மனோகரன் நேற்று (01.07.2024) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை, சண்முகநாதன் மற்றும் ஞானமணியின் பாசமிகு மகனும், கேதீஸ்வரன் (கோப்பாய்), கனாம்பிகை (கந்தர்மடம்), விக்னேஸ்வரன் (நாவலப்பிட்டி), ஜெகதாம்பிகை (இணுவில்), பகீரதி (சுவிஸ்), முருகாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற டமருதபாணி மற்றும் கனகம்மா ஆகியோரின் மருமகனும், கேமலதாவின் அன்புக் கணவரும், வைஷ்ணவி, தர்ஷசன், பவித்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விந்தாரகனின் மாமனாரும், பாஸ்கரன் (சுவிஸ்), கிருபாகரன் (UK), கலைவாணி (சுவிஸ்), மேகலை (கனடா), ஶ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2024) புதன்கிழமை அவரது வீரசுந்தராம மாவத்தை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தஹமான தகனசாலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
[illegible]

# சுவிற்ஸர்லாந்தில் பெரும் வெள்ளம்!

சுவிற்ஸர்லாந்தின் தெற்கு மேகியா பள்ளத்தாக்குப் பகுதியில் பெய்துவரும் கன மழை காரணமாகக் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளப் பெருக்கை அடுத்து சில இடங்களில் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கால் சிலர் காணாமற் போயுள்ள நிலையில், அவர்களைக் கண்டுபிடிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும். பிள்ளைகள் வழியில் வீண்செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சி களில் நன்றாகச் சிந்தித்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாக முடியும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். விட்டுப்பிடித்துச் செல்லவும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் பணம் கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம்** : எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள். தொல்லைகள் நீங்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**கும்பம்:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**மீனம்:** அனுகூலமான நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# சம்பந்தனுக்கான அஞ்சலி ஏது?

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன் தனது 91 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமாகியுள்ளார். மூத்த அரசியல்வாதியான சம்பந்தனின் மறைவு, தமிழ் அரசியல் தலைவரின் மறைவு என்பதைவிடவும் 'பிராந்தியத் தலைவர்' ஒருவரின் மறைவாகவே கருதப்படுகின்றது. இந்தியப் பிரதமர் மோடி முதல், பல சர்வதேசநாடுகளின் தலைவர்கள் வரையில் சம்பந்தனின் மறைவுக்கு அனுப்பிவைக்கும் இரங்கற் குறிப்புகள், தமிழர்களின் வேணவாவையும் அவர்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதற்காக சம்பந்தன் எவ்வளவுதூரம் பயணித்தார் என்பதைத்தான் மெய்ப்பிக்கின்றன. இவ்வாறான இரங்கல்கள் மற்றும் அஞ்சலிப்புகளின் தொடர்ச்சியாக, ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலும் சம்பந்தனின் புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்படுவதற்கு ஏற்பாடாகியிருக்கின்றது. இதன்படி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் மாலை 4 மணிவரை சம்பந்தனுக்கு அங்கு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. ஆனால், சம்பந்தனுக்கான அஞ்சலிப்பென்பது, அரைக்கம்பத்தில் கொடிகளைப் பறக்கவிடுவதோ அவரின் புகழுடலைச் சுற்றி மலர்களை நிரப்பி வைப்பதோ அல்ல. அவருக்கான உண்மையான அஞ்சலிப்பென்பது என்ன என்பதைத் தேடிக்கண்டடையவேண்டிய கட்டாயத்தில் ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் இன்றிருக்கின்றது.

தமிழர்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய அதிகாரப் பகிர்வைக் கொண்டதான சமஷ்டித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே சம்பந்தனின் அரசியல். விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் என்று மௌனித்ததோ அதன் பின்னர் தமிழர்களின் உச்சக்கட்ட அரசியல் வேணவாவும், சம்பந்தனின் அரசியலும் ஒரே புள்ளியில்தான் சந்திக்கின்றன. தனிநாடு என்ற கோரிக்கையை தமிழர்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் கைவிட்டுக் கனகாலம். இதை குறைந்தது நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் திரும்பத்திரும்ப வலியுறுத்தியிருக்கின்றார். ஆனால், தெற்கில் அர்த்தமற்ற பயம் ஏற்படுத்தப்பட்டு, புலிப் பூச்சாண்டி காட்டப்பட்டு ஒவ்வொரு தடவையும் சம்பந்தனின் குரல் மழுங்கடிக்கப்பட்டுக்கொண்டே வந்திருக்கின்றது.

ஐந்தல்ல, பத்தல்ல சுமார் எழுபது ஆண்டுகால அரசியல் சம்பந்தனுடையது. சுதந்திர இலங்கையின் வரலாறும், சம்பந்தனின் அரசியல் வரலாறும் (கால அளவுகள்) கிட்டத்தட்ட ஒன்றுதான். தனிச் சிங்களச் சட்டம், விடுதலைப் புலிகளின் தோற்றம், புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் மற்றும் பேச்சுகள், ஒப்பந்த மீறல்கள், ஆயுத மோதல்கள், இறுதிப்போர், போரின் பின்னரான பேச்சுகள் என அத்தனையிலும் சம்பந்தன் ஏதோவொரு வகையில் தொடர்புற்றுள்ளார். ஆதலால், சம்பந்தனின் கருத்தை 'தேசத்தின் பெருந்தலைவருடைய' கருத்தாகவும் அறிவுரையாகவும் கொண்டு அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டு நாட்டை அடுத்த கட்டத்தை நோக்கி அழைத்துச் சென்றிருக்க வேண்டியது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும். ஆனால், மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மலர்களுக்குப் பதிலாக சம்பந்தன் மீது கற்களையே வீசியிருந்தன. இனவாதம் என்பதைத் தாண்டிச் சிந்திக்கவோ பயணப்படவோ எவரும் முன் வந்ததாகவில்லை. ஆதலால், கொண்ட கொள்கையை நிறைவேற்றமுடியாத 'வலிந்து தோற்கடிக்கப்பட்ட' தலைவராகத்தான் சம்பந்தன் தற்போது மீளாத் துயில் கொள்கின்றார்.

அவரின் அருமையும் பெருமையும் புரிந்துதான் இந்த அஞ்சலிப்பை ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் மேற்கொள்கின்றார்கள் என்றால், சம்பந்தனுக்கான உண்மையான அஞ்சலிப்பென்பது அவர் கொண்ட கொள்கையை நிறைவேற்றிக்கொடுப்பதும், சம்பந்தனின் கோரிக்கையின் பின்னான நியாயபூர்வங்களைப் புரிந்துகொள்வதுமேயாகும்.



# மக்கள் பணத்தில் தேர்தல் பரப்புரை

## அநுரகுமார குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 2**

**நீதி, ஒழுக்கம் பற்றிப் பேசும் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 875 கோடி ரூபா மக்கள் பணத்தை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காக ஒதுக்கியுள்ளார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஹொரண பிரதேசத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை, பதற்றம் ஆகியவை நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பேச்சுகள் தற்போது நிறைவடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# கடற்படைச் சிப்பாய் சாவு! இலங்கை அரசு கரிசனை

கடந்த வாரம் இந்திய மீனவர்களின் படகுடன் கடற்படைப்படகு மோதியதில் கடற்படைச்சிப்பாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளது இலங்கை அரசாங்கம்.
இந்தச் சம்பவம் நடந்த அன்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஷேனுகா செனவிரத்ன இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பில் கடற்படைச் சிப்பாய் இறந்த விடயம் தொடர்பாகவும், சட்டவிரோத எல்லை தாண்டிய தடை செய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடி பற்றியும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.
இதேவேளை வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகார பொறுப்பதிகாரியான நிலுக கதுருகமுவவும் இந்தியத் தூதரகத்துக்கு உத்தியோகபூர்வ கரிசனையை வெளியிட்டிருந்தார். (எ-22-6)



# வானிலை எச்சரிக்கை

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால் அரபிக் கடல் பகுதியில் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் அவதானமாகச் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.
வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் காற்று இடைக்கிடையில்40-50கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (எ-இ)

## சீன நிறுவனத்துக்கு

# கைமாறிய ஒப்பந்தம் நீதிமன்றில் வழக்கு!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையம் அமைக்கும் ஒப்பந்தம் மாற்றியமைக்கப்பட்டமைக்கு எதிராக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இந்த ஒப்பந்தம் சங்கென் நிறுவனத்துக்கு வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அது சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக சங்கென் நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளது.
இந்த முனையம் 96 சோதனை கருமபீடங்களையும், 8 பொதிகளை அனுப்பும் பெல்ட்களையும், 23 விமான தரிப்பிடங்களையும், 3 வாகனப்பாதைகளையும், 28 பயணிகள் வாசல்களையும், ஆறு பேருந்து வாசல்களையும் கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22,6)

# ரணசிங்க பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 2
பதில் சட்டமா அதிபராக சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் இந்த வாரம் ஓய்வு பெறுவதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## நாளை

03.07.2024

**புதன்கிழமை**
**ஆனி - 19**

பிரதோஷ விரதம்

சுபநேரம் : 04.27 - 05.57
இராகுகாலம் : 11.57 - 01.27

## நாளொரு நல்வார்த்தை

**மிக அதிக உயரத்தை அடைய விரும்பினால் கீழ்மட்டத்திலிருந்து தொடங்கு.**

**-சைரஸ்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் மறுசீரமைப்பு:

# நாடாளுமன்றத்தில் இன்று ஜனாதிபதி விசேட உரை

கொழும்பு, ஜூலை 2

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையாற்றவுள்ளார். கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பிலேயே அவர் உரையாற்றவுள்ளார். (ம-66)

# பஸ் கட்டணம் குறைப்பு!

கொழும்பு, ஜூலை 2

நேற்றுத் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் பஸ் கட்டணம் 5.07 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெல்கமுவ இதுதொடர்பான அறிவித்தலை வெளியிட்டார். புதிய கட்டணத்திற்கமைய குறைந்தபட்ச பஸ் கட்டணம் 28 ரூபாவாகும்.

போக்குவரத்து அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை பஸ் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இதுதொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-66)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்.

077 334 1281

**விற்பனைக்கு**

50Km Supper Soundproof ISUZU Engine விற்பனைக்கு உண்டு.

12hrs மட்டும் வேலை செய்த புதியது.

தொடர்புகளுக்கு:

077 218 6351, 077 568 1344

(CS/55560) J-1

**JAFFNA SCIENCE COLLEGE**

A/L CHEMISTRY PAPER CLASS CENTRE

Mr.S.SureshKumar BSc (Hons) PGDE

2024 - Inorganic
2025 - Calculations
2026 - General

G.P.S. RD, Kalviyankadu, Jaffna

T.P. 077 555 9028

(CS/55535) J-1

# மணிவிழா நாள் வாழ்த்து

02.07.2024

திருமதி செல்வராணி சின்னத்துரை (உப அதிபர்)

(B.A/ PGDE)



**சேவைக் காலம்**

- 17.08.1988 - 14.02.2010 யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
- 15.02.2010 - 31.12.2012 யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
- 01.01.2012 - 01.07.2024 யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை

**ஆசிரியரின் சிறப்பான சேவையைப் பாராட்டி இந்நாளில் இறைவனருளுடன் பல்லாண்டு காலமாக சமூகப்பணி தொடரவும் ஓய்வு காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.**

Congratulations

வாழ்த்துவோர்:

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை

(CR/42750) J-1

# யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை

2024.07.02

# மணிவிழா சிறப்பு மலர்

Best Wishes

Congratulations!

## திருமதி சின்னத்துரை செல்வராணி

**உப அதிபர் தொடர்பான தகவல்கள் :**

திருமதி சின்னத்துரை செல்வராணி

முதல் நியமனம் : 17.08.1988 இளைப்பாறும் திகதி : 02.07.2024

ஆரம்பக்கல்வி : யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் (தரம் - 1 - 9 வரை )

இடைநிலைக் கல்வி : யா/ வரணி மகா வித்தியாலயம்

உயர்தரம் : யா/ வரணி மகா வித்தியாலயம்

**சேவை விபரம் :**

முதல் நியமனம் யா/திருநாவுக்கரசு மகா வித்தியாலம் (17.08.1988-14.02.2010) வரை
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் (15.02.2010 - 31.12.2012) வரை
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை (01.01.2013 - 01.07.2024)

**அதிபரின் உள்ளத்திலிருந்து....**

மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்
ஆசிரிய சேவையில் 34 ஆண்டுகள் அரும்பணியாற்றி 02.07.2020 அன்று ஓய்வு பெறும்
திருமதி செல்வராணி சின்னத்துரை - SLTS – 1 (உபஅதிபர் )
"தகுதி என ஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்" என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க நண்பர், பகைவர்,
அயலவர் என்ற பாகுபாடின்றி நடந்து.
ஆயிரமாயிரம் இதயங்களில் அன்பு மகுடமானீர்.
கற்றறிந்த வித்தையினை வித்தாரமாய் விதைத்து
கல்விப்பணியே கடவுட்பணியெனப் பற்றுடனே.
இரவின் இருளைக்கிழிக்கும் நிலவாய்
கல்வியின் கரையினைத் தடையின்றி
மாணவர் அடையத் துடுப்பாய் இங்கே
இரு தசாப்தங்களுக்கு மேலாக
நிறைபுரிந்த நல்லாசானை
சிறப்புக்கள் பல பெற்று பல்லாண்டு வாழியென
அம்பிகையின் தாழ் பணிந்து
அறுபதாவது அகவை நன்னாளில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes



Best Wishes

Congratulations

அனுசரணை : [illegible]ராஜ் தீக்ஷா சாஹி

(CR/42751) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படைச் சிப்பாய் இறப்பு

# கைதான மீனவர்கள் குற்றமற்றவர்கள்!

## பா.ம.க.வின் நிறுவுநர் ராமதாஸ் வக்காலத்து

சென்னை, ஜூலை 2

ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர், கடலில் வீழ்ந்து உயிரிழந்தமைக்காக ஒரு குற்றமும் செய்யாத பத்து தமிழக மீனவர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது: வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற நாகை மற்றும் கடலூர் மாவட்ட மீனவர்கள் 10 பேரை கைது செய்து அவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்துள்ள ஸ்ரீலங்கா கடற்படையினர், அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனையை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர். ஒரு குற்றமும் செய்யாத தமிழக மீனவர்கள் மீது பொய்யான கொலை வழக்கு பதிவு செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

எனவே, ஸ்ரீலங்காவில் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்டுவருவதற்கு உரிய அத்தனை நடவடிக்கைகளையும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (அ-ம)

# ரணிலின் கூட்டம் பதுளையில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் புதிய கூட்டணியால் நடத்தப்படும் மூன்றாவது மக்கள் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி பதுளையில் நடைபெறவுள்ளது. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் ஆகியோரின் ஏற்பாட்டிலேயே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டணியின் முதலாவது கூட்டம் அம்பாந்தோட்டையிலும், இரண்டாவது கூட்டம் மொனராகலையிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-44)

# மருந்தகத்தை சோதனையிட்ட அதிகாரிகளை கடைக்குள் வைத்துப் பூட்டிய உரிமையாளர்!

## பொலிஸாரால் அவர் கைது

யாழ்ப்பாணத்தில் மருந்தகமொன்றை சோதனையிடச் சென்ற அரச அதிகாரிகள் இருவரை, மருந்தகத்துக்குள் வைத்துப் பூட்டிய உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சகத்தின் உணவுக் கட்டுப்பாடு நிர்வாகப் பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர் மருந்தகத்தின் அனுமதி தொடர்பாகச் சோதனையிடச் சென்றபோதே, அதிகாரிகளை அந்த மருந்தகத்தின் உரிமையாளர் கடைக்குள் வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரைக் கைது செய்தனர். (ம-26)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**Vacancy Advertisement for Fleet Assistant**

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict. HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,000 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

We are looking to recruit Fleet Assistant based in Kilinochchi. The purpose of the job is maintaining accurate records of fleet operations and spare parts inventory. This role ensures data integrity, supports fleet management activities, and contributes to the smooth functioning of the fleet department.

Job title: Fleet Assistant
Salary: LKR 63,000.00 per month (after tax, EPF, and ETF)
Location: Kilinochchi
Reports to: Fleet Manager
Working hours: 08.00 to 16.00 hrs

**Key Responsibilities:**

**Data Entry and Management and Inventory Management.**

- Accurately enter and update fleet data, including vehicle information, maintenance records, and fuel consumption.
- Maintain comprehensive records of spare parts inventory, including quantities, descriptions, and locations.
- Ensure all data is entered into the system in a timely manner and is kept up to date.
- Monitor spare parts inventory levels and report any shortages or discrepancies.
- Assist in ordering and restocking spare parts as needed.
- Conduct regular audits of inventory to ensure accuracy.

**Fleet Operations Support.**

- Assist in scheduling and tracking vehicle maintenance and repairs.
- Maintain records of vehicle inspections and ensure compliance with regulatory requirements.
- Generate reports on fleet performance, maintenance schedules, and spare parts usage.

**Communication and Coordination and Administrative Duties.**

- Liaise with store manager and logistic department to ensure timely delivery of spare parts.
- Coordinate with the fleet maintenance team to ensure efficient workflow and minimal downtime.
- Communicate with drivers and fleet operators regarding maintenance schedules and requirements.
- Prepare and maintain documentation related to fleet operations and spare parts.
- Assist in preparing budgets and cost estimates for fleet maintenance and spare parts procurement.
- Perform other administrative tasks as required by the Fleet Manager.

Required:

- Applicants must be fluent in Tamil / English

Applications must be submitted to the below address no later than 09 July 2024 either by post or via email below. If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
[illegible]
[illegible]@halosrilanka.org

(CR/42783) J-1

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**

**தற்காலிக கடைகள் வாடகைக்கு வழங்குதல்**

துர்க்காதேவி தேவஸ்தான ஆடிச் செவ்வாய் உற்சவதினங்களுக்கான தற்காலிக கடை அமைப்பதற்கான ஏலம் எதிர்வரும் 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

குறிப்பு :- கடைகளை ஏலத்தில் பெற்றுக்கொள்பவர்கள் அன்றைய தினமே முழுப்பணத்தினையும் செலுத்துதல் வேண்டும்.

இணைச் செயலாளர்கள்
077 027 9693

(CS/55560) J-1

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**

**பொருட்களுக்கான ஏல விற்பனை**

பாவனைக்கு மேலதிகமாகவுள்ள மரக்கதவுகள், மரயன்னல்கள், மோட்டர், நீர் இறைக்கும் இயந்திரம், இரும்புப்பொருட்கள் ஆகியன எதிர்வரும் 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சங்கப்பணிமனையில் ஏல விற்பனை நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

இணைச்செயலாளர்கள்:

**077 027 9693**

(CS 55559) V-1

யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை

02.07.2024

**மணிவிழா சிறப்பு மலர்**

**திருமதி சின்னத்துரை செல்வராணி**

(உப அதிபர்)



முதல் நியமனம் : 17.08.1988
இளைப்பாறும் திகதி : 02.07.2024
ஆரம்பக்கல்வி : யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் (தரம் - 1 - 9 வரை )
இடைநிலைக் கல்வி : யா/ வரணி மகா வித்தியாலயம்
உயர்தரம் : யா/ வரணி மகா வித்தியாலயம்

சேவை விபரம் :
முதல் நியமனம் யா/திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் (17.08.1988-14.02.2010 வரை:
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 15.02.2010 - 31.12.2012 வரை
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை 01.01.2013 - 01.07.2024
அதிபரின் மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்
பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்
யா/மீசாலை [illegible]
[illegible] ஆரம்பப் பாடசாலை

(CCR/42752) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக பண்பாட்டு விழா

பளை, ஜூலை 2

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பண்பாட்டு விழா, பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்ட செயலர் சு.முரளிதரன், கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-9)

# தவறான முடிவெடுத்து அதிபர் மரணம்

கொடிகாமம், ஜூலை 2

தவறான முடிவு எடுத்து ஓய்வுநிலை அதிபர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் மீசாலை வடக்கு கொடிகாமம் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-25-159)

## மரண அறிவித்தல்

### றொனால்ட் றீகன் (றீகன்)

தோற்றம் 13 . 02 . 1981



மறைவு 01 . 07 . 2024

மண்டைதீவை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட றொனால்ட் றீகன் (றீகன்) நேற்று (01.07.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகம் (கிருஸ்ணமூர்த்தி) காலஞ்சென்ற மரியபேபி தம்பதிகளின் அன்பு மகனும் செல்வி, செல்வதி, சாளினி, சுதாகரன், அனெக்சன், கவிச்செல்வன், பிரபு ஆகியோரின் அன்புச் சகோதரனும் அசோக், குமார், ராசா (முத்துமாரி நகை மாடம்), சசி, உஷா, ஆஷா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். அடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: 076 303 7067, 077 618 4354

(CS 856) V-1

## மரண அறிவித்தல்

### கோபாலபிள்ளை அழகம்மா



பிறப்பு 07.03.1930 இறப்பு 01.07.2024

சங்கத்தானை சாவகச்சேரியை (மீனாட்சி அம்மன் கோவிலடி) பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை அழகம்மா நேற்று (01.07.2024) இறைபதம் அடைந்தார். அன்னார் அமரர்களான நாகமணி - அன்னம்மாவின் புதல்வியும் அமரர் கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும் அமரர்களான இரத்தினம், சிவகுரு, கண்மணி, கைலாயபிள்ளை, செல்லையா, சிவானந்தம், கணேசன், ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் குணரட்ணம், பிறேமாவதி பத்மாவதி, லீலாவதி (சுவீடன்), புனிதவதி, இராஜரட்ணம் (நோர்வே), ரேவதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேபி, கனகசேகரம், கணேசலிங்கம், விஜயகாந்தன், அமரர் குணபாலசிங்கம், ஞானசௌந்தரி, சிறிகணேஸ்வரி, செல்வமூர்த்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி, சங்கத்தானை
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 238 319

(CR42755)S-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 29 . 08 . 1934



விண்ணில் 30 . 06 . 2024

### மகேஸ்வரி கந்தசாமி

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 167/1, இறம்பைக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி கந்தசாமி 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கந்தசாமி (இந்துமதி ஸ்ரோர்ஸ்) அவர்களது அன்பு மனைவியும் கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம், மகாலிங்கம், தருமலிங்கம், மற்றும் நாகேஸ்வரி, வேதநாயகி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்துமதி காலஞ்சென்ற நவநேசன், நவநாதன், நவநீதன், கோமதி, சுமதி, இளமதி, நவதாசன், நவதீசன், ஆகியோரின் அன்பு தாயாரும் அருள்வேற்செல்வன், லோகேஸ்வரி, உமாதேவி, ஸகீலா, ஸ்ரீதரன், சிவகுருநாதன், ரவிகரன், தர்ஷினி, தீபரஜனி ஆகியோரின் பாசமிகு மாமியும் அனுந்திகா, ரஜீவ், நிஷாந்தா, சிவகஜன், சிவலக்ஷன், அபிரன், காண்டீபன், கௌசிகன், பிருந்தா, றொசான், கஜதீபன், செந்தூயன், நிரூஷன், கோபிநாத், நிவேதன், தர்சன், வித்தகி, விதுர்ஷன், கனிஷ்கன், ஹரிஷ், இஷா, சச்சின், சஞ்சய், ஸ்ரேயா, பாகவி, கீர்த்தன், நவதீப், நவந்திகா, ஆகியோரது அன்புப் பேர்த்தியும் பிரனிதன், பிரியஸ்வி, வினோஜ், மகிஷா, சாருஷ், கிருத்விகா, பிரஜித், மன்ஷா, அனிகா, ஹஸ்வித், அர்ஜுன் ருத்ரா ஆகியோரது அன்புப் பூட்டியுமானவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை (03.07.2024) புதன்கிழமை பி.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 807 0567

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1980



மறைவு 08 . 06 . 2024

### ஜேசுதாஸ் முரளிதரன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் வேலணை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜேசுதாஸ் முரளிதரன் (08.06.2024) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேசுதாஸ் மற்றும் பிறின்சியா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யம்பிள் மற்றும் அற்புதம் தம்பதியரின் மருமகனும் டெல்சியாவின் (பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் றிஹானி, மெர்லினா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாதர், காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் சிறிதரன், ஜெனிதரன், கோமஸ் வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலா, சின்னன், ஜனார்த்தினி, பவானி, கலா, சிறீகாந்தன், டள்சினி, துவாரகா காலஞ்சென்ற டாளிங்சன் மற்றும் டெலிங்சன் ஆகியோரின் மைத்துனரும் ரவி, பாலா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (02.07.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து திருப்பலிக்காக புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

260/1 பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி

(CS 55558) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு

அராலி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந. சிவானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ். வலயத்தின் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், நடேஸ்வராக் கல்லூரி அதிபர் பா.பாலகுமார், வலிகாமம் சமூக விஞ்ஞான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செ.பாஸ்கரன், அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை பழைய மாணவியும் ஆசிரியருமான திருமதி ஞா.தயாநிதி, சோதி வேம்படி வித்தியாசாலையின் பழைய மாணவியும் ஆசிரியருமான திருமதி ச.சிவாஜினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)


## மரண அறி ... ல்

தோற்றம் 02 • 03 • 1934



இறைவு 25 • 06 • 2024

## கிருஷ்ணர் குணசிங்கம்

(Tea Factory Officer)

(வட்டவளை, பொகவந்தலாவ ரின்சின்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குணசிங்கம் கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், சிவநேசன் (நோர்வே), சிவரூபன், சிவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதி (நோர்வே), நந்தினி, சுஜந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதா (நோர்வே), கஜந்தன் (நோர்வே), நிகித்தா (நோர்வே), விதுர்ஷிகா, ரித்திக் (லண்டன்), ரித்திஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் குலசிங்கம், காலஞ்சென்றவர்களான புஸ்பலிங்கம், இராஜதுரை மற்றும் செல்வராணி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சாம்பசிவமூர்த்தி மற்றும் மீனாட்சிதேவி, காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுவன் வீதி கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்
(நீதிமன்றம் அருகாமையில்)

தகவல்:
குடும்பத்தினர்
T.P: 077 771 7918

(CS/55550) J-1



## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவு

பிறப்பு 04 • 05 • 1955



இறப்பு 03 • 06 • 2024

அமரர் திருமதி **மேரி மெக்டலின்** (பூங்கொடி)

## ஞானசீலன்

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"
(திருமாத்தேயு 4:7)

நோயினால் துன்புற்றபோதிலும்
எங்கள் குடும்பத்தை உயர்வாக்கினீர்கள்.
காலன் உங்களை அழைத்துச் சென்றாலும்
காலங்கள் மாறினாலும் எங்கள் இதயங்களில்
என்றும் இருப்பீர்கள் ஒளியாக.
உங்கள் ஆத்மா இறைவனில் இளைப்பாற
மன்றாடுகின்றோம்.

இவரின் ஆத்மா இளைப்பாற்றிக்காக அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தில் நாளை (03.07.2024) புதன்கிழமை காலை 6.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலி நிறைவுற்றதும் வீட்டிற்கு வருகை தந்து தேநீர் விருந்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அல்வாய் வடமத்தி,
சக்கோட்டை, பருத்தித்துறை.

இவரின் பிரிவால் துயருறும்
**கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/55553) J-1



# மரண அறிவித்தல்

## இராசையா சிவபாக்கியம்



பிறப்பு 09.03.1938
இறப்பு 29.06.2024

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவபாக்கியம் கடந்த (29.06.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - முத்துக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும், அரசரட்ணம் (அவுஸ்திரேலியா), அரசலிங்கம், மகேந்திரன் (டென்மார்க்), இராஜரட்ணம், ரமேஸ், கருணாதேவி குணரட்ணம், சேந்திமாலா சந்திரராசா, இராஜேஸ்வரி நவரட்ணம், கலையரசி காந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக் காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55554) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு : 21.02.1948 உதிர்வு : 02.07.2023


## அமரர். திரு.கந்தசாமி இளங்கோவன்

மதிப்பு மாறா மண்ணின் வாசம் போல்,
உம் நினைவுகள் நம் இதழ்களில் நிற்கின்றன.
ஒளி நிலவாய் நம் இரவுகளை வெளிக்கொண்டு,
உம் வார்த்தைகள் வீசும் காற்றாய் நம் மனதுக்கு ஆறுதலாய்
மறைந்தாலும் உம் மடியில் காப்பாற்றும்
உம் சிரிப்பின் சூரியன் எப்போதும் உதிக்கும்.
நீங்கள் வழிவிட்டு சென்ற பாதையில்,
உங்கள் ஞாபகங்களை நம் நெஞ்சில் கொண்டு நாம் நடப்போம்.
நீங்கள் நம் இதயத்தில் எப்போதும் வாழ்வீர்கள்.

என்றென்றும் உங்கள்
நினைவில்
குடும்பத்தினர்.

(CS 858) V-1

# மரண அறிவித்தல்



## யோகராசா ஜெயகாந்தன்

(ஓய்வு நிலை அதிபர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி)

பளை முகமாலையை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட யோகராசா ஜெயகாந்தன் நேற்று (01.07.2024) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் யோகராசா காலஞ்சென்ற நல்லம்மா தம்பதியின் அன்பு மகனும் விஜயலதாவின் (ஆசிரியர் யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) அன்புக் கணவரும் விபுசனா (மாணவி ஊவா வெல்லவயா பல்கலைக்கழகம்) கவின்ராஜ் (மாணவன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயவதனியின் (தொழில் வழிகாட்டல் அலுவலர், யாழ் கல்வி வலயம்) அன்புச் சகோதரனும் கஸ்ரன்றோய் இன் (அதிபர், வேலணை மத்திய கல்லூரி) அன்பு மைத்துனரும், யன்சிகா, டிசான் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கதிர்காமர் மற்றும் பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தட்டான்குளம் பிள்ளையார் கோவில் வீதி
மீசாலை வடக்கு
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42756) S-1

# சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 12, பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர் ச.முகுந்தன் 'மாணிக்கவாசகரும் திருச்சூழலும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ-25)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிர வாரச் சிறப்புச்சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதர் ஆசியுரையையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும் ஆற்றுவார்கள்.

இளம் சைவப்புலவர் பிரசங்க வாரிதி ச.நவநீதன் 'சிவமாக்கி எனையாண்ட அத்தன்' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ-25)

## கனத்த இதயத்துடன் ஆழ்ந்த அனுதாபங்கள்




எமது பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய

**அமரர் ஜேசுதாஸ் முரளிதரன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 03.10.1980 மறைவு 09.06.2024

பிரிவின் துயரில்:
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 01 . 1932



மறைவு 01 . 07 . 2024

## இராசையா பரமேஸ்வரி

இராஜ இராஜேஸ்வரி வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் முருகன் வீதி உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பரமேஸ்வரி நேற்று (01.07.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை-சீதேவன் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சண்முகநாதன், செல்வதுரை, விஸ்வலிங்கம், மகேஸ்வரி, சீவரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா (U.K) மற்றும் கலாதேவி (U.K), ஸ்ரீஸ்கந்தகுமார் (U.K), கலாஇந்திரை (Australia), ஸ்ரீஸ்கந்தநிதி (Colombo), ஸ்ரீஸ்கந்தராம் (ஓய்வு நிலை உப தபால் அதிபர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரமணி, சுதந்தினி, ருக்மணிகாந்தன், ரஞ்சனா, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், வஜீரா, திவ்யன், ஜெகன், கீர்த்தனா, லவன், ராகுலன், கபிலன், விஷாலி, ருக்சான், நிலானி, பிரியந்தன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஈதன் (Ethan), சமர் (Sumer), காயத்திரி, ஆரீஷன், அனன்யா, காவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 428 7910

(CS 856) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணின் கணவர் சுவிஸில் வசித்து வருகின்றார். அவருடன் கடந்த 24ஆம் திகதி வீடியோ அழைப்பில் கதைத்துக்கொண்டு இருந்தவேளை இருவருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே கணவனின் கண் முன் அந்தப் பெண் தூக்கிட்டுள்ளார்.

கணவன் அயல் வீட்டுக்காரருக்கு அறிவித்ததையடுத்து அந்தப் பெண் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்த நிலையில், சிகிச்சையின்போது அவர் நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26-27)

### கடற்படைச் சிப்பாய் சாவு

# இந்திய மீனவர்களைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் போர்

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களைக் கைதுசெய்ய முற்பட்ட வேளை ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்த நிலையில், அவருடைய மறைவுக்கு நீதிகோரி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அத்துமீறி நுழைந்து அண்மையில் யாழ். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களைக் கைதுசெய்ய முற்பட்ட வேளை மீனவர்களின் படகுமோதி ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்தே உயிரிழந்த சிப்பாய்க்கு நீதிகோரியும், அத்துமீறிய மீன்பிடியை நிறுத்துமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மருதடிச் சந்தியில் ஆரம்பமான எதிர்ப்புப் போராட்டம் யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தை நோக்கிச் சென்றது. தூதரகத்துக்கு அருகில் போராட்டக்காரர்களை இடைமறித்த பொலிஸார் தூதரக அதிகாரிகளைச் சந்திப்பதற்கு ஐந்து பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கினர். இதனைத் தொடர்ந்து யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரியிடம் சம்மேளனத்தினரால் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (ம-66-27)

## சம்பந்தனின்...

அண்மைக்காலமாக சுகவீனமடைந்திருந்த சம்பந்தனின் உடல்நிலை நேற்று முன்தினம் இரவு மோசமானதைத் தொடர்ந்து, அவர் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் உயிரிழந்தார். அவருடைய மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

சம்பந்தனின் புகழுடல், இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கொழும்பு பொரளையில் ஏ.எவ்.றேமண்ட் மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. அங்கிருந்து அவரது பூதவுடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றத்துக்கு எடுத்துவரப்பட்டு, அங்கு வைத்து அஞ்சலியும் மரியாதையும் செலுத்த ஏற்பாடாகியுள்ளது.

அதன்பின்னர் மாலை 4 மணிக்கு சம்பந்தனின் பூதவுடல் நாடாளுமன்றத்தில் இருந்து அவரது சொந்த இடமான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன.

இறுதிக் கிரியைகளை அரச நிகழ்வாக நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டாலும் சம்பந்தனின் குடும்பத்தின் மத, கலாசார முறைப்படி அது முன்னெடுக்கப்படும் என்றும், அதன் காரணமாக வழமையாக அரசநிகழ்வாக முன்னெடுக்கப்படும் இறுதி நிகழ்வுகளில் இடம்பெறும் இராணுவ மரியாதை நிகழ்வு இதில் இடம்பெறாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## அதிகாரப்...

சம்பந்தன் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். தமிழர்களின் அதிகாரப் பகிர்வுக்காக தனது இறுதி மூச்சுவரை அவர் பாடுபட்டார் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தனின் மறைவு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில் மேலும் உள்ளதாவது:-

"இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் மரியாதையைப் பெற்ற அரும்பெரும் தலைவராக சம்பந்தன் திகழ்ந்தார். இறுதி மூச்சு வரையிலும் தமிழ் மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார் - செயற்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரை நூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வந்தன. இலங்கை தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் போராடினார்.

இந்தியாவோடும், தமிழ்நாட்டுடனும் மிகச்சிறந்த நட்புறவை சம்பந்தன் பேணினார். தலைவர் கலைஞரின் நண்பராகவும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும், திகழ்ந்த அவரைச் சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து நான் ஆலோசித்துள்ளேன்.

தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய இரா.சம்பந்தனின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்யமுடியாது. அவரது மறைவு இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமன்றி உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும் - என்றுள்ளது. (அ-ம)

## சம்பந்தனின்...

நாடாளுமன்ற உறுப்பினராக தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சண்முகம் குகதாசன் நியமிக்கப்படவுள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் காலமானார். அவரது மறைவால் நாடாளுமன்ற ஆசனத்தில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளது.

இறுதியாக கடந்த 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சண்முகம் குகதாசன் இரா. சம்பந்தனுக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். இதன் அடிப்படையில் சம்பந்தனின் இடத்துக்கு குகதாசனை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-66)

## தமிழர்களின்...

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவருடனான சந்திப்புகளின் இனிமையான தருணங்கள் எப்போதும் நினைவு கூரப்படும். அவர் இலங்கையில் வாழும் தமிழர்களின் அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், நீதி மற்றும் கண்ணியம் போன்றவைக்காக தொடர்ந்து பாடுபட்டார் - என்றுள்ளது. (அ-ம)

## பாடசாலைகள்...

முரண்பாட்டுக்குத் தீர்வை வழங்குமாறு வலியுறுத்தியும், கொழும்பில் அண்மையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் பலப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையைக் கண்டித்தும், ஆசிரியர்களின் போராட்டத்தை அடக்கியொடுக்குவதற்காக கல்வியை அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்குவதற்குத் திட்டமிடுவதற்கு எதிராகவும் இந்தப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

பி.ப. 2 மணிமுதல் இந்தப் போராட்டம் இடம்பெறும் என்றும், இவற்றில் பெற்றோரும் கலந்துகொள்வார்கள் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (அ-ம-20)

## கோப்பாயில்...

கோப்பாயில் கடந்தவாரம் முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில், அவருடைய இறப்பு கொலை என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாயில் 63 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்தவாரம் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவர் படுக்கையில் உயிரிழந்ததாக அவருடன் நின்ற ஒருவர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையில் அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கையிடப்பட்டது.

இதையடுத்து கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், மேற்படி நபர் படுக்கையில் உயிரிழந்ததாகத் தெரிவித்த நபரே அவரைக் கழுத்து நெரித்துக் கொன்றார் என்பது தெரியவந்துள்ளதுடன், அவர் சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## 25 இந்திய...

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை காரணமாக, நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 25 இந்திய மீனவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே, அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட மேற்படி 25 மீனவர்களும் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு அழைத்துவரப்பட்டு விசாரணைகளின் பின்னர், நீரியல்வளத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகர் தெரிவித்துள்ளார். (அ-ம-125)

## பெருந்தலைவர்...

கட்சி அலுவலகத்துக்கு முன்பாக சிவப்பு, மஞ்சள் வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் சம்பந்தனின் உருவப்படம் வைக்கப்பட்டு, சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் கட்சிக் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

நிகழ்வில், காரைநகர் பிரதேசசபை முன்னாள் தவிசாளர் பாலசந்திரன், வலிகாமம் மேற்கு முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி, பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி மகளிர் அணியினர், தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

குடத்தனை 6ம் கட்டை, பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதி முகப்பில் **8 பரப்பு வயல்/தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.** நீர் வசதியுண்டு, நான்கு பக்கமும் வேலியுண்டு.

(CS/28144) J-1

தொடர்பு:- **077 607 1142**

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

**சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்**

(CS/55548) J-1

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

## வேலையாள் தேவை

106 யாழ் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள தங்குமிட விடுதிக்கு **பராமரிப்பாளர் (ஆண்) தேவை.**

(CS/55551) J-1

தொடர்பு :- **077 785 3165**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

1. கணக்காளர், உதவிக்கணக்காளர்.
   தகைமை: A/L வர்த்தகம்
   Ms Office
   Qick Book
2. களஞ்சிய காப்பாளர் - (ஆண்)
   (யாழ் மாநகரசபைக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு:

**076 561 5492, 070 511 5335**

## பலாலி கண்ணார் வயல் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பரிபாலன சபை

அம்பிகை அடியார்களே!

பலாலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ நாள் எதிர்வரும் (12.07.2024) ஆரம்பமாக இருப்பதால் பிரதேச செயலகத்தின் மூலம் அனுமதி பெறவேண்டியிருப்பதால் பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலுக்கமைய ஆலயத்திற்கு வழிபடச்செல்லும் உபயகாரர்கள் மற்றும் அடியவர்கள் தங்கள் பெயர் விபரங்களை 05.07.2024 இற்கு முன்பு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
கு.வில்வராசா

பரிபாலன சபையினர்

தொடர்புகளுக்கு :- 077 755 2947

(CS/55552) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 08 . 1940



மறைவு
29 . 06 . 2024

### பொன்னுத்துரை சுந்தரலிங்கம்

நல்லூர் தெற்கு ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான பொன்னுத்துரை சுந்தரலிங்கம் கடந்த (29.06.2024) சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற சித்திராவின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி (கனடா), ஞானேஸ்வரி (கனடா), ஜெயந்தி (கொழும்பு), சுரேந்திரன் (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிதரன் (கனடா), சண்முகவடிவேல் (கனடா), இரவீந்திரன் (கொழும்பு), சாம்பவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நீரஜன், ஜானுஜன், தர்ஷிகன், துஷானி, கிஷோக், தனுஷ்கர், பிறிட்டிகா, அஷ்மி, சுவன், ஜனிக் ஆகியோரின் பாசமிகு பேரனும், ராஜேஸ்வரி (ராணி), பத்மநாதன் (ஜேர்மனி), கருணாதேவி (பொலிஸ் அன்றி - கட்டப்பிராய்), தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான யோகராஜா (கனடா), புவனேஸ்வரி (NSB யாழ்ப்பாணம்), தர்மேந்திரன் (கல்வித்திணைக்களம்), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை (03.07.2024) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் 8/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**8/1, ஸ்ரான்லிக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.**

(CS/55557) J-1

தகவல்:
குடும்பத்தினர்
**077 431 9801
077 212 0469**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.